# எனது ஊர் காரை நகர்

www.karaiNEWS.com

கனடாவில் இருந்து வெளியாகும் காரைநகர் செய்தி சஞ்சிகை. அனைவருக்கும் இலவசம். தொலைபேசி: 416 821 8390 இதழ் 18

வெளியீட்டு அனுசரணை: Dr.V.Vijayaratnam M.D




உள்ளே:

- 10 ஆண்டுகள் பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம்...
- கடந்து வந்த 'காரை ஸ்வரங்கள்' ..
- பிரான்ஸ் காரை சங்கத்தின் ஊறிற்கான பணிகள்...
- காரை கோட்ட கல்வி பணிப்பாளராக திரு. ஆ.குமரேசமூர்த்தி...
- ஊறி பாடசாலை அதிபர் இ.சிறிகரன் பிரியாவிடை...
- 'சுவிஸ் நாதனின்' திருப்பணிகள்...
- என்றும் எப்போதும் கனடா-காரை கலாசார மன்றம்...

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கும் மேலும் வளரவும் பிரான்ஸ் காரை சிறார்களின் கலையார்வம், மொழிப்பற்று சிறக்கவும் பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் மென்மேலும் வளர்ச்சியடைய "எனது ஊர் காரைநகர்" சார்பாக வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது.

தொகுப்பாளர் "எனது ஊர் காரைநகர்"
தீசன் திரவியநாதன்

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் நிர்வாக சபையில் தொடர்ந்து நிர்வாகத்தினை அலங்கரித்தவர்கள் வருமாறு:

## 2008 - 2010 காலப்பகுதியில் : -

தலைவர்: திரு.பொன்னுத்துரை சிவகுமார்
உபதலைவர்: திரு.சீனியர் பரமலிங்கம்
செயலாளர்: திருமதி உதயகுமார் வடிவாம்பிகை
உபசெயலாளர்: திரு.கனகசுந்தரம் சிவராஜா
பொருளாளர்: திரு.சிவகுரு சண்முகநாதன்

**நிர்வாக சபை உறுப்பினர்கள்:**

திருமதி. குலசேகரம் ஸ்ரீகரலட்சுமி
திருமதி. ஸ்ரீஸ்கந்தராஜா தவமணி
திரு.அருளானந்தம் செல்வச்சந்திரன்
திரு.செல்லத்துரை சிவபாதசுந்தரம்
திரு.கணபதிப்பிள்ளை விஸ்வநாதன்
திரு.கணேஷ் மயில்வாகனம்
திரு.நடராசா சிவசோதி
திரு.இராசையா சண்முகலிங்கம்
திரு.பழனியாண்டி மயிலானந்தம்
திரு.பரமசிவம் சோதிலிங்கம்

**கணக்கு பரிசோதகர்:** திரு. சண்முகநாதன் தவபாலன்
**போஷகர்:** திரு.தேவராசா தேவஞானம்

## 2010 - 2012 காலப்பகுதியில்:-

தலைவர்: திரு.T.ஜெகநாதன்
உபதலைவர்: திரு.V.விக்கினராஜா
செயலாளர்: திரு.A.முத்துலிங்கம்
தொடர்ந்து...திரு.S.தவபாலன்
உபசெயலாளர்: திருமதி.K.கனகாம்பிகை
பொருளாளர்: திருமதி.T.செல்வநாயகி

**நிர்வாக சபை உறுப்பினர்கள்:**

திரு.R.சண்முகலிங்கம்
திரு.N.நிமலாநந்தன்
திரு.S.ராஜேந்திரம்
திருமதி..P.தனலட்சுமி
திருமதி.A.சிவமலர்
**போஷகர்:**திரு.தேவராசா தேவஞானம்

## 2012 -2014 காலப்பகுதியில்:-

தலைவர்: திரு.அருளானந்தம் செல்வச்சந்திரன்
உபதலைவர்: திரு.K.சுகிர்தராஜா(சுந்தா)
செயலாளர்: திரு.S.தவபாலன்
உபசெயலாளர்: திரு.K.கஜேந்திரன்
பொருளாளர்: திரு.க.மயில்வாகனம்

**நிர்வாக சபை உறுப்பினர்கள்:**

திரு.N.சந்திரசேகரம்
திரு.T.அமிர்தலிங்கம்
திரு.R.சண்முகலிங்கம்
திருமதி.N.புஸ்பமலர்
திருமதி.A.நேசமலர்
திரு.S.சண்முகநாதன்
திரு.K.சிவராசா
திருமதி.T.செல்வநாயகி

**கணக்காய்வாளர்:** திரு.S.பரமலிங்கம்
**திட்டமிடல் குழு:**
திருமதி.S.சிவதாஸ்
திருமதி.R.வசந்தி

## 2014 - 2016 நடைபெறும் காலப்பகுதி:-

**தலைவர்:** திரு.சண்முகநாதன் தவபாலன்
**உபதலைவர்:** திரு.K.சுகிர்தராசா
**செயலாளர்:** திரு.A.செல்வச்சந்திரன(19.04.2015 வரை)
பின்னர்...திருமதி உதயகுமார் வடிவாம்பிகை
**உபசெயலாளர்:** திரு.A.முத்துலிங்கம்
**பொருளாளர்:** திரு.K.மயில்வாகனம்
**உபபொருளாளர்:** திரு.V.P.சோதிலிங்கம்

**நிர்வாக சபை உறுப்பினர்கள்:**

திரு.N.அரிகரராசா
திரு.S.சண்முகலிங்கம்
திருமதி.A.நேரமலர்
திருமதி. சிவசக்தி
திரு.E.பகீரதன்
திரு.N.சந்திரசேகரம்
திரு.K.சிவராஜா
திரு.E.இராஜேந்திரன்

**மன்றத்தின் காப்பாளர்கள்:**

திரு.S.பற்குணராசா
திரு.தேவராஜா தேவஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TPR Transport

we're here to get you there

# TPR TRANSPORT & MOVING

**Furniture Lift Rental - Storage**

**Individuals & Professionals (all around Europe)**

* Groupage Service: France, UK
* Special price for Paris, London
* Reception, Storage & Distribution
* Packing and Furniture Lift Services
* Sale of Moving Materials
* AffordablePrice and Quality Services
* Insurance

* Devis Gratuit
* Groupage Service France, Angleterre
* Tarif Special pour Paris, London
* Stockage, Reception & Disrtibution
* Emballage, Monte-Meuble
* Vente Fournitures
* Prix Abordables et Service de Qualite




# TPR Transport

117, Rue de Crimèe, 75019, Paris

Landline: +33 01 34 10 70 77 Mobile: + 33 06 24 55 29 25

SiteWeb: www.tpr-transport.com, Email: info@tpr-transport.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் கடந்த காலங்களில் நடைபெற்ற ஆண்டு விழாக்கள் தொடர்பான ஒரு பார்வை!

### 2007

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா 03.06.2007 அன்று A.G.E.C.A. 177 rue de Charonne, Paris 75011 என்னும் முகவரியில் அமைந்துள்ள மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் திரு.தி.ஜெகநாதன் தலைமையில் பிரதம விருந்தினராக மலேசியாவில் இருந்து வந்து திரு.திருமதி S.S.சர்மா அவர்கள் கலந்து கொள்ள நடைபெற்றது.




### 2010

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா 28.02.2010 அன்று 52 Place de Torcy 75018, Paris என்னும் இடத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் திரு.பொன்னுத்துரை சிவகுமார்(கிளி) அவர்களின் தலைமையில் பிரதம விருந்தினராக திரு.இளையதம்பி தயானந்தா அவர்கள் கலந்து கொள்ள நடைபெற்றது.



விபரமான புகைப்பட காட்சிகள் மற்றும் செய்திகள்:
**www.karainews.com**

### 2012

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு விழா 06.05.2012 அன்று 124 Rue de Bagnolet, 75020 Paris என்னும் இடத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் தலைவர் திரு.அருளானந்தம் செல்வச்சந்திரன் (நேரு மாஸ்ரர்) தலைமையில் பிரதம விருந்தினராக திரு.செ.ஆனைமுகன் அவர்கள் நியூசிலாந்தில் இருந்து வந்து கலந்து கொள்ளவும், சிறப்பு விருந்தினராக திரு.ந.அமிர்தலிங்கம் அவர்கள் கனடாவில் இருந்து வருகை தந்து கலந்து கொள்ளவும் நடைபெற்றது.







### 2014

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் நான்காவது ஆண்டு கலை விழா 16.02.2014 அன்று 124 Rue de Bagnolet, 75020 Paris என்னும் இடத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் தலைவர் திரு.அருளானந்தம் செல்வச் சந்திரன் தலைமையில், பிரதம விருந்தினராக காரை அபிவிருத்தி சபை தலைவர் திரு சிவா T மகேசன் அவர்கள் காரைநகரில் இருந்து வந்து கலந்து கொள்ளவும், கௌரவ விருந்தினராக திருமதி விஷ்வன் நவரத்தினம் நிமலராணி அவர்கள் மலேசியாவில் இருந்து வந்து கலந்து கொள்ளவும், சிறப்பு விருந்தினர்களாக பிரித்தானியா, சுவிஸ், கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்த காரை நலன்விரும்பிகளும் கலந்து கொள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


...மண்டபம் நிறைந்த மக்கள் வெள்ளத்தில் விழா இனிதே நடைபெற்றது. **2014 இல் நடைபெற்ற விழாவில் இருந்து சில காட்சிகள் எடுத்து வரப்பட்டுள்ளன....**


































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஊக்கம் தந்து எமது ஊர் மக்களின் மேம்பாட்டிற்கான பணியில் உதவிக்கரம் நீட்டிய சகல ஸ்தாபனங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், உங்கள் ஸ்தாபனங்கள் தொடர்ந்து மென்மேலும் வளர்ச்சிபெற எமது வாழ்த்துக்கள்


**Le Restaurant Indian Lounge**
**vous accueille dans son cadre unique et vous propose ses spécialités indiennes aux saveurs authentiques**



la décoration intéricure du restaurant a été réaliosée par la boutique:

***NIRVANA***

Bijoux
cadeaux d' Asie
10 rue du Cpllet
Vieux - Nice




**34 rue Droite - 06300 Nice**

**04 93 85 38 39**

www.indianlounge.fr

# GANDHI

**RESTAURANT INDIEN**



**3 quai de l'Epi - parking du Nouveau Port**
**83990 Saint - Tropez**

**Tél: 04 94 97 71 71**

www.gandhisai.com

siva@gandhisai.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SARL THEIPAN




சகலவிதமான இலங்கை, இந்திய

மளிகைப் பொருட்கள் மலிவாகக் கிடைக்கும் இடம்

**17, Rue de la Charronnerie**

**93200 Saint Denis**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் ஊரிற்கான சேவைகள்!

## காரைநகர் முன்பள்ளிகள்:

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட குறுகிய காலத்தினுள் காரைநகரில் இயங்கி வந்த முன்பள் - ளிகளின் நிலமைகள் தொடர்பான விபரங்களையும் அதன் செயற்பாடுகள் பற்றியும் அறிந்து கொண்டார்கள்.

அது மட்டுமன்றி அன்று காரைநகர் அபிவிருத்தி சபையின் செயலாளராக பணியாற்றிய ஜெ.தில்லையம்பலவாணர் அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்கவும் அன்றைய நிர்வாக சபையினரின் ஏகோபித்த கருத்திற்கு இணங்க 28.10.2007 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முன்பள்ளிகளிகளின் ஆசிரியர்களின் ஐந்து வருடங் களுக்கான கொடுப்பனவு நிதியை சங்கம் பொறுப்பேற்பது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

L'ASSOCIATION CARITATIVE KARAI FRANCE
காரை நலன் புரிச்சங்கம்
பிரான்சு

அதன் அடிப்படையில் நிர்வாக அங்கத்தவர்களின் பெரும் ஒத்துழைப்புடன் விரைவாக நிதி சேகரிக்கப்பட்டு முதற்கட்டமாக 7,000 யூரோக்கள் (அண்ணளவாக 11 இலட்சம் ரூபாய்கள்) 2008ம் ஆண்டு ஜனவரியில் இலண்டன் வந்திருந்த திரு.ஜெ.தில்லையம்பலவாணர் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிதி காரைநகர் அபிவிருத்தி சபையினரால் 29.01.2008ம் ஆண்டு வங்கி கணக்கில் வரவிலிடப்பட்டு 1,105200.00 (11 இலட்சத்து 5 ஆயிரத்து இருநூறு ரூபாய் கள்) வரவில் இடப்பட்டதாகவும், இதன் மூலம் காரைநகர் முன்பள்ளி ஆசிரியர்களிற்கான மாதாந்த கொடுப்பனவு மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி செயலமர்வுகளுக்கான செலவுகளிற்காக பயன்படுத்தப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

தொடர்ந்து 2008ம் ஆண்டு நடுப்பகுதியிலும் மேற் கொண்டு 3000 யூரோக்கள் பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தினரால் இத்தேவைக்கென அனுப்பி வைக்கப்பட்டது.

இச்செயற்பாடானது அன்றைய இக்கட்டான காலத்தில் காரைநகரில் பெரும் சிரமங்களிற்கு மத்தியில் இயங்கி வந்த முன்பள்ளிகளின் செயற்பாடுகளிற்கு புத்துணச்சி அளித்ததுடன் முன்பள்ளி ஆசிரியர்கள் மத்தியில் பெரும் நம்பிக்கையினையும், குறைந்தளவிலேனும் மாதாந்தம் ஒரு தொகை பணம் சம்பளமாக கிடைக்கப்பெறும் என்னும் உற்சாகத்தினையும் அளித்தது.

அதுவரை பெரும்பாலான காரைநகர் முன்பள்ளி ஆசிரியர்களிற்கு மாதாந்தம் குறிப்பிட்ட திகதியில் எவ்விதமான பணமும் கொடுக்கப்பட்டு வந்தது இல்லை. அவ்வப்போது அல்லது மாதாந்தம் கிடைக்கின்ற சில நூறு ரூபாய்களே முன்பள்ளி ஆசிரியர்களிற்காக வழங்கப்பட்டு வந்தது. அதன் காரணமாக பயிற்றப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களோ அன்றி தகுதி வாய்ந்த முன்பள்ளி ஆசிரியர்களோ இப்பணிக்கு வருவதில்லை.
10ம் வகுப்பு வரை படித்துவிட்டு பொழுது போக்கிற்காக பாலர் கல்வி கற்பிக்கும் நோக்கத்தில் சிரமதான அடிப்படையிலே தான் முன்பள்ளி ஆசிரியர்கள் பலர் கல்வி கற்பித்து வந்தார்கள்.

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்தில் முன்னெடுத்த இந்த ஊரிற்கான செயற்பாடானது காரைநகரில் முன்பள்ளிகளின் வளர்ச்சியினை குறைந்த காலத்தில் வளர்ச்சிப் படிக்கு இட்டு சென்றதுடன் உள்ளூரிலும் முன்பள்ளிகளின் வளர்ச்சிகளை கருத்தில் கொள்ள வைத்தது.

01.01.2007 இல் "எனது ஊர் காரைநகர்" காலாண்டு அறிமுகம் செய்யப்பட்டது. முதலாவது இதழில் காரைநகர் முன்பள்ளிகளின் கவலைக்கிடமான நிலமைகள் விபரமாக எடுத்து வரப்பட்டிருந்ததும், மற்றைய பாடசாலைகளில் மலசலகூட வசதிகளின் நிலமைகள் மிக மோசமாக இருந்த



நிலையும் உலகம் முழுவதிலும் வசிக்கும் ஊர் மண்ணின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட காரை அபிமானிகளின் கவனத்தினை வெகுவாக ஈர்த்திருந்தது.

அதன் காரணமாகவும் 2008ம் ஆண்டு முடிவிற்குள் அனைத்து முன்பள்ளிகளிற்கும் பாலர்கள் சுடுநிலத்தில் அமர்ந்து கல்வி கற்பதை தவிர்த்து தளபாட வசதிகள் உள்ளூர் ஆர்வலர்களினால் காரைநகர் அபவிருத்தி சபையின் ஊடாக வழங்கப்பட்டன.
முன்பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் தகைமைகள் பற்றி விழிப்புணர்வு உண்டானது, குறைந்த பட்சம் 2000 ரூபாய்களாவது மாதாந்தம் கிடைக்கும் என்கின்ற குறைந்த பட்ச நம்பிக்கை முன்பள்ளி ஆசிரியர்களிடத்தில் ஏற்பட்டது. ஏற்கெனவே ஒரு சில முன்பள்ளிகள் மட்டும் ஓரளவு அடிப்படை தேவைகளுடன் இயங்கிக் கொண்டிருந்தது.

முன்பள்ளிகளிற்கு தமது பிள்ளைகளை அனுப்பாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாக தரம் ஒன்று ஆரம்ப பாடசாலைகளிற்கு அனுப்பி வந்த பல பெற்றோர்கள் முன்பள்ளிகளிற்கு தமது பிள்ளைகளை 3 வயது முதல் அழைத்துச் செல்ல தொடங்கினார்கள்.

2012ம் ஆண்டு கல்வித் திணைக்களம் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக முன்பள்ளி ஆசிரியர்களிற்கான அடிப்படை நிவேதனத்தினை கல்வித் திணைக்களம் வழங்க முன்வந்தது. இது முன்பள்ளிகளின் வளர்ச்சிக்கும் மக்களின் முயற்சிக்கும் கிடைத்த பெரும் வெற்றி எனலாம். ஆனாலும் கல்வித் திணைக்களம் அதிக பட்சம் மாதாந்தம் 4,000 ரூபாய்கள் வரை மட்டுமே வழங்கவும், தரம் 10 சித்தியடைந்த பின்னர் பயிற்றப்பட்ட ஆசிரியர்களிற்கு மட்டுமே இந்த அடிப்படை நிவேதனம் வழங்கப்படும் எனவும் வரையறுத்துக் கொண்டது.

காரைநகர் முன்பள்ளிகள் சிலவற்றில் பலகாலம் பயிற்றுவித்து வந்த சிலர் இந்த கல்வித் திணைக்களத்தின் வரைமுறைகளினால் பாதிப்படைந்தனர். பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் காரைநகர் அபிவிருத்தி சபையின் ஊடாக நிரந்தர வைப்பில் இட்டு வைத்திருந்த 10 இலட்சம் ரூபாய்களின் ஊடாக கிடைக்கப் பெற்ற வங்கி வட்டி 12 விகிதமளவில் இருந்து தற்போது 6 விகிதமளவிற்கு வீழ்ச்சியடைந்து வந்துள்ள நிலையில் கல்வித் திணைக்களத்தினால் மாதாந்த நிவேதனம் கொடுக்க முடியாத ஆறு முதல் எட்டு முன்பள்ளி ஆசிரியர்களிற்கு மட்டுமே தற்போது வங்கியில் இருந்து கிடைக்கப்பெறும் வட்டி பணத்தின் ஊடாக மாதாந்த நிவேதனம் வழங்கப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் மாதாந்த குறைந்த பட்ச ஆசிரியர் நிவேதனம் மட்டும் ஒரு முன்பள்ளியின் வளர்ச்சியினை இன்றைய காலத்தில் இதற்குமேல் எடுத்து செல்ல முடியாது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

காரைநகரில் தற்பொழுது ஒரு சில முன்பள்ளிகள் பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்திடமிருந்து எந்த உதவிகளையும் பெற்றுக்கொள்ளத நிலையில் தாமாக முன்னேற்றம் கண்டுள்ளன. அவற்றிற்கு காரணம் அந்த முன்பள்ளிகளில் தகைமையுடன் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மாதாந்தம் 8,000 ரூபாய்களிற்கு மேல் மாதாந்த நிவேதனம் வழங்கப்பட்டு, அடிப்படை வசதிகள் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டு இயங்கி வருவதால் பெற்றோர்கள் அந்த முன்பள்ளிகளிற்கு தமது பாலர்களை நிதி கொடுத்து பாலர் கல்விக்கு அனுப்பி வருகின்றார்கள்.

காரைநகர் முன்பள்ளிகள் சில வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பிரதேசங்களில் அமைந்துள்ளன. அவற்றிற்கு தமது பிள்ளைகளை அனுப்ப பெற்றோர்கள் தயா-ராக இல்லை, காரணம் அங்கு அடிப்படை வசதியோ அன்றி கற்றல் வசதியோ அன்றி தகுதி வாய்ந்த ஆசிரியர்களோ அல்லது போதியளவு ஆசிரியர்களோ இல்லை என்பதாலாகும்.

எனவே இதுவரை காலத்திற்கு ஏற்ப மாற்றமடைந்து தக்க வைக்கப்பட்டுள்ள முன் பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களிற்கும் 6,000 முதல் 8,000 ரூபாய்கள் வரை குறைந்த பட்ச மாதாந்த நிவேதனம் வழங்கப்படுவதற்குரிய நடவடிக்கையினை சம்பந்தப்பட்டவர்களும், வெளியிடங்களில் உள்ள காரை அமைப்புக்களும் முன்னெடுக்க வேண்டும்.
அது மட்டுமன்றி முன்பள்ளிகளிற்கு பாலர்கள் விரும்பி செல்லும் அளவிற்கு விளையாட்டு பயிற்சிகளுடன் கூடிய கற்கை முறைக்காக போதியளவு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். மூன்று முதல் நான்கு வயது பிள்ளைகள் பாடசாலைக்கு சென்றவுடனேயே எழுத்து-க்களையோ அன்றி சொற்களையோ கற்க முடியாது என்கின்ற நிலமையினை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் ஆரம்பத்தில் எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஊடாக காரைநகர் முன்பள்ளிகள் இன்று ஓரளவு தக்க வைக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சி தொடர்வதன் ஊடாகவே முன்பள்ளிகளின் நிரந்தர வளர்ச்சியினையும் காரை மண்ணின் மீது நாம் கொண்ட பற்றுதலையும், அறிவுள்ள சமுதாயத்திற்காக ஆரம்பத்-திலேயே வித்திடுவதன் மூலம் மட்டுமே சாத்தியம் என்பதனையும் கல்வியாளர்கள் இடம் பெயர்ந்த நாடுகளிலும் சிரமத்தின் மத்தியில் வாழ்பவர்களிற்கு விளங்க வைக்க வேண்டும். விளங்க வைப்பார்கள் என்ற நம்பிக்கை "எனது ஊர் காரைநகர்" நிறையவே கொண்டுள்ளது.

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் காரைநகர் முன்பள்ளிகளிற்காக மட்டுமன்றி காரைநகரில் இருந்து கிடைக்கப்பெற்ற மற்றும் பல வேண்டுகோள்களிற்கு அமைய முடிந்தளவு நிதியுதவிகளும் வழங்கி வந்துள்ளது.

## காரைநகர் அபிவிருத்தி சபை மாணவர் நூலகம்:

காரைநகர் அபிவிருத்தி சபை மாணவர் நூலகத்திற்கான திட்டத்தில் மன்றத்தினை இணைத்துக் கொண்டு இன்று காரைநகரின் இன்றைய சமுதாயத்தின் சின்னமாக அமைக்கப்பட்டு வரும் மாணவர் நூலகத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்கி வந்துள்ளதுடன் பிரான்ஸ் வாழ் காரைநகர் மக்களிடத்தில் இந்நூலகம் தொடர்பான விழிப்புணர்ச்சியை உண்டு பண்ணியதும் குறிப்பிடத்தக்கது.



## இன்னோரென்ன சேவைகள்:

அத்துடன் யாழ்ற்ரன் கல்லூரி, வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை(அப்புத்துரை) ஆகிய பாடசாலைகளின் கற்றல் தேவைகளிற்காக வேண்டுகோளின் அடிப்படையில் உதவிகள் புரிந்து வந்துள்ளமையும், களபூமியில் அ-மையவுள்ள ஆயுள்வேத வைத்திய சாலைக்கான காணி வேண்டுவதற்காக அதன் ஒரு பகுதி நிதியினை பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ் பாரிசில் 'காரை ஸ்வரங்கள் முன்பள்ளி'





பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரில் வாழும் காரைநகர் பிள்ளைகளின் தமிழ், சமய, கலாசார விழுமியங்களை பேணி பாதுகாக்கும் நோக்கில் 2014ம் ஆண்டு ஆரம்ப பகுதியில் திரு.A.செல்வச்சந்திரன் அவர்களின் தலைமையிலான நிர்வாக சபையினரால் திருமதி.T.செல்வநாயகி அவர்களை ஆசிரியையாக கொண்டு தமிழ், சமய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்தன.

ஆனாலும் துரதிஸ்டவசமாக ஒருசிலரின் கருத்து முரண்பாடுகள், தனிப்பட்ட சிலரின் தான் தோன்றித் தனமான செயற்பாடுகள் கடந்த சில மாதங்களாக இச்செயற்பாடு தடைபட்டுள்ளதும் இங்கே தெரிவிக்கப்பட வேண்டியதாகும்.



மீண்டும் இவ்வகுப்புக்கள் தொடர்ந்தும் நடைபெற ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டு கலைவிழாக்களை மட்டும் நடாத்துவதன் மூலம் இடம் பெயர்ந்த நாடுகளில் எமது காரைநகர் கலாசாரமும் தமிழ், சமய அறிவும் வளர்ந்து விடப்போவதில்லையென்பதனையும் இது போன்ற வகுப்புக்கள் ஊடாகவே இடம் பெயர்ந்த நாடுகளில் தமிழையும் சமயத்தையும் வளர்த்துக் கொள்ள முடியும் என்பதனையும் உரியவர்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புகின்றோம்.









**காரைநகர் செய்திகள் உடனுக்குடன் தினம் தினம் பார்த்து அறிந்து கொள்ள www.karainews.com இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள். செய்திகள், செய்திகளிற்கு அப்பால் உள்ள உண்மைகள் விபரமாகவும் விளக்கமாகவும் எடுத்து வருவதில் 'எனது ஊர் காரைநகர்' எப்போதும் முன்னணியில்....!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கமும்...'எனது ஊர் காரைநகர்" தொடர்புகளும்...**
**ஒரு புகைப்பட கண்காட்சி !**

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் வரவு செலவு ஒரு கண்ணோட்டம்..!

இடம் பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள காரை அமைப்புக்கள் அங்கத்தவர்களிடம் இருந்தும் அனுசரணையாளர்களிடம் இருந்தும் மற்றும் அன்பளிப்புக்கள் ஊடாகவும் பெறப்படும் பணத்திற்கு உரிய முறையில் விபரமாக வரவு செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்க தவறி வருகின்றன. அல்லது ஏதோ கடமைக்காக ஒரு அறிக்கையினை நிர்வாக முடிவில் வெளியிடுவதுடன் அவற்றினையும் உரிய முறையில் அங்கத்தவர்களிற்கோ அன்றி அனுசரணை வழங்கியவர்களிற்கோ அன்றி அன்பளிப்பு வளங்கியவர்களிற்கோ கிடைக்கும் வகையில் செயற்படுவதில்லை.

இதன் காரணமாக பலவித தவறுகள் இடம்பெறுவதற்கு சாதகமாக அமைவதுடன் நிதி உதவிகளை வழங்கியவர்களிற்கு நம்பிக்கையினையும் அவர்கள் வழங்கிய நிதி உதவிகள் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகளையும் அறிந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு வருகின்றது.

இந்த நிலையினை போக்கி பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் விபரமான வரவு செலவு அறிக்கையினை வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஒரு குறிப்பிட்ட செயற்பாட்டிற்கான நிதி சேகரிப்பின் போதோ அல்லது அன்பளிப்புக்களை வழங்கியவர்களது பெயர்கள் அனைத்தும் விபரமாக குறிப்பிடப்பட்டு தொகையும் குறிப்பிடப்பட்டு இறுதியில் மொத்த தொகையினை குறிப்பிடுவதன் மூலமே நிதி உதவி வழங்கியவர்களை கௌரவப்படுத்துவதுடன் மேற்கொண்டும் நிதி உதவி வழங்க அவர்களை ஊக்கப்படுத்தி நம்பிக்கை நாணயத்தினை ஒரு பொது அமைப்பு வளர்த்துக்கொள்ள முடியும்.

பொத்தாம் பொதுவான அறிக்கைகளை வெளியிட்டு அதன் மூலம் பலவித பண மோசடிகளை அரங்கேற்றிய பொது அமைப்புக்களின் நிர்வாகங்களை 'எனது ஊர் காரைநகர்' அறிந்து கொள்வதுடன் அது தொடர்பான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு முன்வருகின்றது.

www.karainews.com என்ற இணையத்தள முகவரியின் ஊடாக வெளியிடப்படும் செய்திகள் முற்றிலும் உண்மையானவையும் ஆதாரங்களுடனும் எடுத்து வரப்படுபவை. மேற்படி இணையத்தளம் ஊடாக தெரிவிக்கப்படும் செய்திகள் ஒருபோதும் தனிப்பட்டளவில் விதண்டாவாதத்தினை விதைப்பதற்காகவோ அன்றி சுயநலன்களை கருத்தில் கொண்டோ வெளியிடப்படுவன அல்ல. முற்றிலும் ஊர் மண்ணின் வளர்ச்சி, ஊர் மன்றங்களின் வளர்ச்சி மற்றும் நம்பிக்கை நாணயத்தினை வளர்ப்பதற்காகவே தெரிவிக்கப்படுகின்றன.
ஊர் மன்றங்களில் திட்டமிட்டு தமது சுய தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகவும், வேறு இன்னபிற தேவைகளிற்காகவும் ஊர் மன்றங்களை பயன்படுத்தி தனிப்பட்டளவில் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் ஒரு சிலர் எமது சமுதாயத்தில் ஊர் மன்றங்களில் பொதுப் பணிகளில் ஈடுபட்டு வருவது அனைவராலும் கண்டு கொள்ளத்தக்கது.

அவர்களை உண்மையுடனும் நேர்மையுடனும் பணியாற்றும் ஊடகங்கள் ஊடாக இனம் கண்டு கொண்டு அவர்களை பொதுப்பணியில் இருந்து அப்புறப்படுத்துவதற்கு சிந்தனையும் செயற்பாடும் திறனும் கொண்டவர்கள் முன்வரவேண்டும். இடம் பெயர்ந்த நாடுகளில் காரை மக்கள் அனைத்து உரிமைகளும் கொண்டு ஊர் பற்றுடன் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதனை உணர்ந்து கொள்வோமாக.

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் 2012 - 2014ம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கையினை விபரமாக வெளியிட்டுள்ளது கண்டு கொள்ளத்தக்கது. அதன் ஊடாக ஒவ்வொரு செயற்பாடுகளிற்கும் நிதியுதவி அளித்தவர்கள், அன்பளிப்புக்கள் வழங்கியவர்கள் மற்றும் செயற்பாடுகளை தெளிவாக அறிந்து கொள்ள கூடியதாக இருந்தது பாராட்டுதற்குரியது. அந்த வகையில் 2012 - 2014ம் ஆண்டுகளில் இம்மன்றத்திற்கு கிடைத்த நிதி உதவிகள் ஊடாக செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் எடுத்து வரப்பட்டுள்ளது.

**2012 - 2014 இற்கான வரவு செலவு**

| | வரவு | செலவு |
|---|---|---|
| 2012இற்கு முன் இருப்பு வங்கி | 655,00 | |
| காரை முன்பள்ளிக்காக 2012 மீள்பெறப்பட்ட பணம் | 3125,00 | |
| மண்டப செலவு மீள் வரப்பட்ட தொகை (2012) | 900,00 | |
| முன்பள்ளிக்கு அனுப்பப்பட்டது (2013) | | 4600,00 |
| நூல் நிலையத்திற்கான வரவு (2013) | 3480,00 | |
| நூல் நிலையத்திற்கு அனுப்பபட்டது(2013) | | 3300,00 |
| அப்புத்துரை பாடசாலைக்கு வந்தது(2013) | 760,00 | |
| அப்புத்துரை பாடசாலைக்கு கொடுத்தது(2013) | | 760,00 |
| யாழ்ரன் பாடசாலைக்கு வந்தது(2013) | 1100,00 | |
| யாழ்டன் பாடசாலைக்கு கொடுத்தது (2013) | | 1100,00 |
| ஆயுள்வேத மருத்துவமனைக்காக சேர்க்கப்பட்டது (களபூமி) | 1182,00 | |
| ஆயுள்வேத மருத்துவமனைக்காக கொடுக்கப்பட்டது (2014) | | 1200,00 |
| மாணவர் நூல் நிலையத்திற்கு கொடுத்தது (2014) | | 600,00 |
| காரைநகர் முன்பள்ளிக்கு கொடுத்தது (2014) | | 1200,00 |
| விழா மூலம் வரவு | 803,00 | |
| வங்கி இருப்பு | 290,00 | |
| வங்கி செலவு 2 வருடம் | | 300,00 |
| அங்கத்தவர் வரவு | 1698,00 | |
| மன்றக்கூட்ட செலவு (அஞ்சலி + மண்டபம்) | | 868,00 |
| அச்சக செலவு | | 175,00 |
| நண்பர்கள் மூலம் வரவு (2014) | 410,00 | |
| காப்புறுதி(நவம்பர் 2013 - நவம்பர் 2014) | | 300,00 |
| | 14403,00 | 14403,00 |

இவ்வறிக்கையில் உள்ள வரவுசெலவு அறிக்கையில் சரியாததில் யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.

இ. சண்முகநாதன் (கணக்காய்வாளருக்காக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளராக திரு.ஆ.குமரேசமூர்த்தி அவர்கள் நியமனம்



காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி வந்த திரு.பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் அவர்கள் 04.01.2016 அன்று ஓய்வு பெற்றுச் சென்றமையை அடுத்து காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளராக திரு.ஆறுமுகம் குமரேசமூர்த்தி (A.K.மூர்த்தி) அவர்கள் பதவி ஏற்றுள்ளார்.

காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த திரு.ஆ.குமரேசமூர்த்தி அவர்கள் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியின் பழைய மாணவராவார். 1980 களில் காரைநகர் இந்துக் கல்லூரியில் இரசாயனவியல் ஆசிரி -யராகப் பணியாற்றியவர். 'A.K.மூர்த்தி மாஸ்ரர்' என அன்பாக அழைக்கப்படும் திரு.அ.குமரேசமூர்த்தி அவர்கள் அர்ப்பணிப்பும் சேவை உணர்வுமுள்ள மிகச் சிறந்த இரசாயனவியல் ஆசிரியர் ஆவார்.

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றிய இவர் பின்னர் 2008-2010 காலப்பகுதியில் காரைநகர் இந்துக் கல்லூரியில் அதிபராகச் சேவையாற்றி கல்லூரியை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல முற்பட்டவர்.

புதிய காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்றுள்ள திரு.ஆறுமுகம் குமரேசமூர்த்தி அவர்களை காரைநகர் மக்களுடன் சேர்ந்து எமது கல்லூரிச் சமூகமும் வரவேற்பதுடன் அவரின் பணி சிறப்புற வாழ்த்துகின்றோம்!

## காரைநகர் கோட்ட கல்வி அதிகாரியாக கடமையாற்றிய திரு.பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் அவர்களிற்கு கௌரவம்!



காரைநகருக்கான தனியான கல்விக்கோட்டம் ஆரம்பிக்க ப்பட்டது முதல் இன்றுவரை காரைநகர் கல்விக்கோட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றி காரைநகர் பிரதேச மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்ட திரு பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் அவர்கள் ஜனவரி 04, 2016 உடன் ஓய்வு பெற்றதை முன்னிட்டு w.w.w.karainews.com இன் அனுசரனையுடன் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை சமூகத்தினரால் கடந்த பரிசளிப்பு விழாவில் கௌரவிக்கப்பட்டார்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு -த்துறை அமைச்சர்த.குருகுலராசா பொண்ணாடை போர்த்திக் கௌரவித்தார். ஓய்வுநிலை வடமாகாணக் கல்விப்பணிப்பாளரும் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவருமான ப.விக்னேஸ்வரன் மலர்மாலை அணிவித்து கௌரவித்தார். தீவக வலய ஓய்வுநிலைக் கல்விப்பணிப்பாளர் வி.இராதாகிருஸ்ணன், வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை அதிபர் க.நேத்திரானந்தன் ஆகியோர் நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவித்தனர். காரைநகர் அபிவிருத்திச் சபைச் செயலாளர் இ.திருப்புகழூர்சிங்கம் வாழ்த்துரை வழங்கினார்.


காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனையுடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சைகள் கருத்தரங்குகளைச் சிறப்புடன் கடந்த பல வருடங்களாக நடத்தி அதிக மாணவர்கள் மேற்படி பரீட்சையில் சித்தியடைய வழி -



சமைத்ததுடன், மன்றத்தின் ஆரம்பப் பாடசாலைகளுக்கான ஒரு மில்லியன் திட்டத்தினை சிறப்பாகச் செயற்படுத்த வழி -சமைத்தவர்.

காரை மண்ணை தன் மண்ணாகக் நினைத்து தன்னலம் கருதாது சேவையாற்றிய காரைநகர் கல்விக்கோட்டப் பணிப்பாளர் திரு.பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் அவர்கள் தனது ஓய்வு காலத்தில் தேக ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ ஈழத்துச் சிதம்பரக் கூத்தப்பிரானை பிரார்த்திப்பதுடன் காரை நியூஸ் இணையத்தளம் சார்பாக வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

## ஊரி அ.மி.த.க.பாடசாலை அதிபர் இ.சிறிகரன் இடமாற்றம் பெற்றார்



ஊரி அ.மி.த.க.பாடசாலையில் கடந்த 12 ஆண்டுகள் அதிபராக கடமையாற்றி காரைகரின் முன்னணி ஆரம்ப பாடசாலை-லயாக உயர்த்திய "கடமை வீரன்" திரு.இ.சிறிகரன் சங்கா -னை சிவப்பிரகாசா மகா வித்தி -யாலய அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார். ஊரி அ.மி.த.க பாடசாலை காரைநகரின்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டு பழமை வாய்ந்த பாடசாலையாக காணப்ப - ட்டாலும் காலம் காலமாக கற்றலில் பின்தங்கிய நிலையில் இருந்து வந்துள்ளது.






அதனை கடந்த 12 ஆண்டுகள் பொறுப்பேற்று அதிபராக கடமையாற்றிய சங்கானையை சேர்ந்த திரு.இ.சிறிகரன் அவர்கள் காரைநகரின் முன்னணி ஆரம்ப பாடசாலையாக சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளும் மாணவர்களைக் கொண்ட பாடசாலையாக, நிர்வாகத்திலே சிறப்பாக செயற்படும் பாடசாலையாக பௌதீக வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி முன்னிலைக்கு கொண்டு வந்த பெருமைக்கு உரியவராவார்.

இவரது சேவையினை இப்பகுதி மக்கள் வெகுவாக பாராட்டி பிரியாவிடை விழா வைத்து சிறப்பித்திருந்தனர். அத்துடன் இவரது சேவையினை பாராட்டி சிறீஸ்வரம் எனும் சேவை சிறப்ப விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

பெற்றோர்கள் கண்ணீர் மல்க இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர் இ.சிறிகரன் அவர்களை அனுப்பி வைத்தனர். "எனது ஊர் காரைநகர்" ஊடாக முதன் முதலாக இவரது பணிகள் இனம் காணப்பட்டு 2008ம் ஆண்டளவில் இப்பாட - சாலைக்கு அனைத்து வகையிலும் முன்னுரிமை கொடுத்து சிறப்பித்து வந்ததுடன், உரிய முறையில் இப்பாடசாலையின் செயற்பாடுக ளை இனம் கண்டு தெரிவித்த தையும் இங்கே பெருமையுடன் பகிர்ந்து கொள்ளலாம்.



## ஆயிலி சிவஞானோதயா வித்தியாலயத்திற்கு புதிய இரண்டு மாடி கட்டிடம்!

ஆயிலி சிவஞானோதயா வித்தியாலய பழைய மாணவ - ரான திரு.S.K.நாதன் அவர்கள் மேற்படி பாடசாலைக்கு ஒரு கோடி ரூபாய்கள் செலவில் இரண்டு மாடிகளைக் கொண்ட வகுப்பறை கட்டிடம் ஒன்றினை தனது பெற்றோர்களின் நினைவாக நிர்மானித்து வழங்கியுள்ளார்.



காரைநகர் மீள குடியமர்வின் பின்னர் இறுதியாக 2014ம் ஆண்டு மீள திறக்கப்பட்ட இப்பாடசாலையானது பௌதீக வளங்கள் எதுவுமற்ற நிலையில் இயங்க ஆரம்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இ.வசீகரன் அவர்களை அதிபராக கொண்டு மீள 2014இல் திறக்கப்பட் -ட இப்பாடசாலை பரரோபகாரி திரு.சுப்பிரமணியம் கதிர்காம - நாதன் அவர்களது பெரும் கொடை யினால் மீள எழச்சி பெற்றுள்ளது.



அதிபர்: இ.வசீகரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சுவிஸ் நாதன்" எண்ணத்தில் உதித்த வறிய நிலையில் உள்ள முதியவர்களுக்கான உலர் உணவு வழங்கும் திட்டம்



காரைநகரில் வதியும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் முதியோர்களிற்கு உணவு வழங்கும் திட்டத்தினை சுவிஸ் நாதன் அவர்கள் கடந்த வருடம் 08.11.2015 முதல் காரைநகரில் ஆரம்பித்து வைத்தார்.


தொடர்ந்து மாதாந்தம் இவர்களிற்கான உலர் உணவுகள் கிரமமாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு கடந்த சில மாதங்களாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. காரைநகரில் S.K.நாதன் நற்பணி மன்றம் ஆரம்பிக்கப்பட்டு மனிதாபிமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் அமைப்பாளராக திரு.கணேச பிள்ளை பாலச்சந்திரன் அவர்கள் செயற்பட்டு வருகின்றார்.






காரைநகரில் பயனற்ற வகையில் மூடப்பட்டிருந்த சைவமகா சபை கட்டிடத்தினை நாதன் நற்பணி மன்றத்தினர் நற்பணி மன்றத்தின் தேவைகளிற்காக பயன்படுத்தி வருவதுடன் மேற்கொண்டு பல சேவைகளினையும் செய்து வருகின்றது.

கோவளம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் கட்டிடம் புனரமைக்கப்பட்டதுடன் அதற்குரிய உதவிகளையும் செய்து வருகின்றது. அத்துடன் காரை மத்தி முதியோர் பராமரிப்பு நிலையத்தினருக்கு மாதாந்தம் மதிய உணவு வழங்க தேவைப்படும் நிதியினை கொடுத்து உதவவும் முன்வந்துள்ளது.



சுவிஸ் நாதன் அவர்களின் தர்ம காரியங்கள் காரைநகர் மக்களினால் வெகுவாக பாராட்டப்பட்டு வருவதுடன் அவர்களது அன்பையும் ஆதரவையும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்துகின்றனர் காரை மக்கள்.

## ஈழத்து சிதம்பரம் நுழைவாயில் அலங்கார பாவை கோபுர குடமுழுக்கு!



S.K.நாதன் அவர்களின் முழுமையான நிதி அனுசரணையுடன் 05.10.2015 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு 06.12.2015 அன்று திருப்பணி வேலைகள் நிறைவு பெற்று குடமுழுக்கு நடைபெற்றது.

ஈழத்து சிதம்பரத்தின் தெற்கு பகுதி நுழைவாயிலில் மூன்றாம் வீதிக்குள் நுழையும் வாசலில் அமைக்கப்பட்டுள்ள இந்த அலங்கார பாவை கோபுரமானது ஈழத்து சிதம்பரத்தின் தெய்வீக நிலையினை மேலும் சிறப்புற செய்துள்ளதுடன் புதிய தோற்றத்தினையும் கொண்டு விளங்க ஏதுவாக அமைந்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் 12.02.2016 அன்று நடைபெற்றது!










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா-காரை கலாசார மன்றத்தின் 2013 யூன் 23 தொடக்கம் 2015 மே 10 வரை நடைபெற்ற செயற்பாடுகள் கனடா காரை கலாசார மன்றத்தின் வரலாற்று அதிசயங்கள்....

1). 2 ஆண்டுகளில் மொத்தம் 1,85,000 (ஒரு இலட்சத்து எண்பத்து ஐயாயிரம்) டொலர்கள் திரட்டப்பட்டன.

2). 1,40,000(ஒரு இலட்சத்து நாற்பது ஆயிரம்) டொலர்கள் (ஒரு கோடியே 50 இலட்சம் அண்ணளவாக)காரை மண்ணிற்கு அனுப்பி வைக்கப்பட்டன(இவற்றில் 1 கோடியே 40 இலட்சம் முழுமையாக பாடசாலைகளிற்கு மட்டும் வழங்கப்பட்டன).

3). 11 ஆரம்ப பாடசாலைகளுக்கு(தரம் 1 முதல் தரம் 5) தலா 10 இலட்சம் வீதம் ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய்கள் காரைநகர் அபிவிருத்தி சபை மற்றும் பாடசாலைகளின் அதிபர்களின் பெயரில் நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ளது.

4). 25 ஆண்டுகள் கனடாவில் இயங்கி வந்த கனடா காரை கலாசார மன்றத்தின் கணக்கு வழக்குகள் கனடிய வருமான வரி திணைக்களத்திற்கு முதன் முறையாக அனுப்பி வைக்கப்பட்டது.

5). 1 ஒருவரால் ஒரோ முறையில் 20,000 டொலர்கள் முதன் முறையாக இப்பெருந்தொகை மன்றத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

**12 ஆரம்ப பாடசாலைகள்...**

**1 கோடி 20 இலட்சம் ரூபாய்கள்...**

**இரண்டு வருடங்கள்...**

**ஒரு நிர்வாக சபை...**

**கனடா-காரை கலாசார மன்றம்**
**தலைவர்: த.பரமானந்தராசா**

6). 10.05.2015 அன்று மேற்படி நிர்வாக சபை விபரமாகவும் விளக்கமாகவும் கடந்த இரண்டு வருடங்களாக பெறப்பட்ட ஒவ்வொரு 5 சதமும் யாரிடம் இருந்து எதற்காக பெறப்பட்டது என்ற விபரங்களை உள்ளடக்கி ஐந்தொகையுடன் கூடிய வரவு செலவு அறிக்கையினை வெளியிட்டது.

7). கனடா காரை கலாசார மன்றத்தின் கடந்த சில வருடங்களாக நிதி செயற்பாடுகளில் (2013 வரை 2009க்கு பின்னர்) வருடங்களில் நடைபெற்ற மோசடிகள் ஆதாரங்களுடன் திரட்டப்பட்டன... மக்களின் தீர்ப்பிற்காக காத்திருக்கின்றன..!

மேற்படி ஏழு அதிசங்கள் கனடா காரை கலாசார மன்றத்தின் 23.06.2013 அன்று தலைமை பதவியை ஏற்றுக்கொண்ட திரு.தம்பிஜயா பரமானந்தராசா தலைமையிலான நிர்வாக சபையினரால் நிகழ்த்தப்பட்டன.

கனடா காரை கலாசார மன்றத்தின் கடந்த 25 வருட கால சேவையின் போது மன்றத்துடன் இணைந்து மன்றத்தின் வளர்ச்சிக்காகவும் மண்ணின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்ட சேவையா-ளர்கள், தொண்டர்கள் மேற்படி அதிசயங்களை நிகழ்த்துவதற்கு நிர்வாக சபையினருடன் பெரும் துணையாக இருந்ததுடன் மேற்படி செயற்பாடுகள் ஊடாக பெருமையினை அடைந்து கொள்வதுடன் மன்றத்தின் மீது அளவிலா நம்பிக்கையினை கொண்டுள்ளார்கள்.

அது மட்டுமன்றி மேற்படி தரவுகள் 10.05.2015 அன்று வெளியிடப்பட்ட கனடா காரை கலாசார மன்றத்தின் வரவு செலவு அறிக்கையில் இருந்து கனடாவில் கணக்கியல் துறையில் அங்கீகாரம் பெற்று அதே துறையில் பெயர் பெற்று விளங்கும் காரியாலயம் ஒன்றில் கணக்கியல் வல்லுனராக பணிபுரி-யும் திரு.தம்பிஜயா பரமானந்தராசா அவர்களால் முறைப்படி தயாரிக்கப்பட்ட வரவு செலவு அறிக்கையில் இருந்து பெறப்பட்டவையாகும். மீண்டும் 04.12.2015 அன்று மேற்படி வரவு செலவு அறிக்கை விபரமாக இரண்டாவது கணக்காய்வாளரினால் மீள்பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு தற்போதைய நிர்வாக சபையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த நாடுகளில் வாழும் காரை மக்கள் பலவித சுமைகளை தமது தலைகளிலே சுமந்த வண்ணம் தமது அன்றாட தேவைகளையே நிறைவு செய்ய முடியாத வகையில் வாழ்க்கையை பாரமாக கொண்டு வாழுகின்ற இக்காலகட்டத்தில் ஊரிற்காக, மண்ணிற்காக, மக்களிற்காக, நாம் படித்த பாடசாலைகளிற்காக என 10 டொலர்கள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதையே மிகுந்த சிரமமாக பேசிக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் இரண்டு வருடங்களில் ஒரு இலட்சத்து எண்பத்து ஐயாயிரம் டொலர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு சாத்தியமானது... என்பதனை அறிந்து கொள்ள வேண்டியது பொதுப்பணியில் ஈடுபடுபவர்களிற்கு மிக மிக இன்றியமையாதது.

கனடாவில் நேரடியாக காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்த 3,000 (மூவாயிரம்) குடும்பங்களைச் சேர்ந்த 5,000க்கும் மேற்பட்டவர்கள் வாழ்ந்து வருவதாக ஒரு கணக்கு எடுத்தியம்புகின்றது. ஆனாலும் கனடா காரை கலாசார மன்றத்தின் இலவச ஒன்றுகூடல்களில் கலந்து கொள்ளவும், பரிசில்கள் பெறவும் அதிகூடியளவில் கடந்த காலங்களில் 1500 வரையான மக்களே அவ்வப்போது ஆர்வம் காட்டி வந்துள்ளார்கள். அது தவிர கடந்த 25 வருட மன்றத்தின் வரலாற்றில் அதிகூடியளவில் வருடம் ஒன்றிற்கு 350 வரையான காரை மக்களே இம்மன்றத்தில் அங்கத்துவ பணம் கட்டிய அங்கத்தவர்களாக இணைந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆயிரம் இருந்தும் வசதிகள் இருந்தும் 2013ம் ஆண்டு இம்மன்றத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை 266 மட்டுமே. அத்துடன் 2014ம் ஆண்டு 144 அங்கத்தவர்களே, 2015ம் ஆண்டு 77 அங்கத்தவர்கள் மட்டுமே. அதாவது 11 காரைநகர் ஆரம்ப பாடசாலைகளான தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புக்களை கொண்ட இயங்கி வரும் பாடசாலைகள் 12 ஆகும். அவற்றில் 11 ஆரம்ப பாடசாலைகளிற்கு 2015.05.05 அன்று தலா பத்து இலட்சம் வீதம் நிரந்தர வைப்பில் இட்டு வழங்கிய அதே வருடம் கனடா காரை கலாசார மன்றத்தில் அங்கத்தவர்கள் எண்ணிக்கை 77 பேர்கள் மட்டுமே.

இது தவிர காரைநகர் பாடசாலைகளின் உடனடி அடிப்படை அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 2014 மற்றும் 2015 மே மாதம் வரை மேற்கொண்டு 40 இலட்சம் ரூபாய்கள் வரை வழங்கப்பட்டன. அவற்றில் காரைநகர் இந்துக் கல்லூரிக்காக 9 இலட்சம் ரூபாய்கள் பல்லூடக கற்கை நெறி வகுப்புகளிற்காகவும், 5 இலட்சம் ரூபாய்கள் யாழ்ற்ரன் கல்லூரி கணணி கொள்வனவிற்காகவும், 2 இலட்சம் ரூபாய்கள் ஊரி அ.மி.த.க.பாடசாலையின் மேலதிக வகுப்புகளிற்காகவும் வழங்கப்பட்ட அதிகூடிய பணங்களாகும். இவை தவிர மற்றைய அனைத்து பாடசாலைகளிற்கும் உடனடி கற்றல் தேவைகள் மற்றும் கற்றலுடன் சம்பந்தப்பட்ட தேவைகளை நிவர்த்தி செய்ய வழங்கப்பட்ட மொத்த தொகை 40 இலட்சம் ரூபாய்கள் வரையாகும்.

இவை தவிர கனடாவில் 2014, 2015 மே வரை நடாத்தப்பட்ட தமிழ், சமய, பிரென்ஞ், யோகா வகுப்புக்களிற்கு 9,000 டொலர்கள் செலவு செய்யப்பட்டன. கனடா காரை கலாசார மன்றத்தின் யாப்பின் பிரகாரம் கனடாவில் காரைநகர் மக்களிடத்தே தமிழ்,சமய அறிவினை காரை மக்களிடத்தே இம்மன்றம் மேம்படுத்தும் என்ற வாக்கிற்கு இணங்க இம்மன்றத்தினால் மேற்படி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பிக்கப்பட்ட முதல் இரண்டு மாதங்கள் வகுப்புகள் ஒவ்வொன்றிற்கும் தலா 25 முதல் 30 வரையானவர்கள் கலந்து கொண்டார்கள்.

அதன் பின்னர் தொடர்ந்து நடாத்துவதற்கு வகுப்பிற்கான இட வசதி மற்றும் ஆசிரியர்க - ளிற்கான கொடுப்பனவு என்பவற்றை கருத்தில் கொண்டு மாதம் ஒன்றிற்கு ஒரு பாடத்திற்கு 10 டொலர்கள் அறவிடுவது என நிர்வாக சபையி- னரால் தீர்மானிக்கப்பட்டது. அதன் பின்னர் வகுப்புகளிற்கு கலந்து கொண்ட பலர் அரை - வாசிக்கு மேல் வகுப்புக்களில் இருந்து விடுபட்டுக் கொண்டனர் என்பது அறிந்து கொள்ளத்தக்கது.

**காரைநகர் செய்திகள், காரைநகர் மக்கள் மன்றங்களின் செய்திகள் உடனுக்குடன் பார்வையிடுவதற்கு www.karainews.com என்ற இணையத்தள முகவரியில் அன்றாடம் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட காரைநகர் மக்கள் வந்து செல்கின்றார்கள்.**

இருந்த போதிலும் அதன் பின்னரும் தமிழ், சமய வகுப்புக்களிற்கு 2015 மே மாதம் வரை 15க்கும் மேற்பட்ட சிறார்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். 2015 மே மாதம் மன்றத்தின் நிர்வாகத்தை பொறுப்பெடுத்துக் கொண்ட போஷகர் சபை உடனடியாக அவ்வகுப்புக்களை இரத்து செய்தது. தொடர்ந்து வந்த நிர்வாகங்களினாலும் இன்றுவரை அவ்வகுப்புக்களை மீள நடாத்துவதற்கு இயலவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கனடா காரை கலாசார மன்றத்தின் 2013 மற்றும் 2014 ஆகிய இரண்டு "காரை வசந்தம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளின் மூலமே இந்நிதி பெறப்பட்டன. இவற்றினை வழங்கியவர்களில் பெரும்பாலானோ -ர் விளம்பரங்களின் ஊடாக அனுசரணை வழங்கியவர்கள் ஆவார்கள். இவை தவிர 2014ம் ஆண்டு முற்றிலும் இலவசமாக 25வது ஆண்டு விழா நடாத்தப்பட்டது. இவ்விழா கனடா காரை கலாசார மன்றத்தின் 15வது விழாவாகவும் அமைந்திருந்தது. அத்துடன் இவ்விழா அனுசரணை மூலம் இலாபமாக பெறப்படும் நிதி முழுமையாக காரைநகர் பாடசாலைகளிற்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

கனடா காரை கலாசார மன்றம் 2005ம் ஆண்டு முதல் மன்றத்தின் தேவை முடிந்து மண்ணின் பெயரால் மக்களிடம் இருந்து பெறப்பட்ட மிச்ச நிதியினை ஊரின் தேவைகளிற்காக, கல்வி தேவைகளிற்காக, மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவு செய்வதற்காக வழங்குவதற்கு ஆர்வம் காட்டவில்லையென்பது கவலைக்குரிய விடயமாகும். அதன் காரணமாக முதன் முதலில் 2006ம் ஆண்டு “காரை வசந்தம்” விழா முடிவில் 14,000 டொலர்கள் இலாபமாக பெறப்பட்ட போதிலும் அதனை காரை மண்ணின் தேவைகளை இனம் கண்டு அவற்றினை நிறைவு செய்ய முடியவில்லை.


அதன் மூலம் பெரும் சிக்கல்கள் அன்றைய நிர்வாகத்தில் இருந்தவர்களிற்கு ஏற்பட்டது ஆனாலும் போதிய ஊர் பற்றிய அறிவும் தேடலும் இல்லாமையினாலும் ஊர் பற்றிய அக்கறை இல்லாமையினால் அந்த நிர்வாகத்தினால் முடிவு எட்டப்படாத நிலையிலும் ஊரின் தேவைகளிற்காக எஞ்சிய நிதியினை வழங்க மனம் இல்லாத நிலையிலும் சிக்கல்களிற்கு முற்றுப்புள்ளி வைக்க அதிரடியாக மேற்கொண்டு 1000 டொலர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு நிரந்தர வைப்பில் இடப்பட்டது.

அந்த நிரந்த வைப்பின் மூலம் கடந்த 8 ஆண்டுகளாக மன்றத்திற்கு எவ்விதமான பலன்களோ அன்றி வட்டியே குறிப்பிடத்தக்களவில் கிடைக்கப்பெறவில்லை என்பதுடன் அந்நிதியானது அவ்வப்போது முறைகேடன வழியில் பின்னர் நிர்வாகங்களில் வந்தவர்களினால் வழிநாடாத்தப்பட்டது.

உண்மைகளை அப்பட்டமாக எழுதுவதாலும், பொய்களிற்கு எந்த வகையிலும் இசைந்து கொடுக்காத காரணத்தினாலும் 2012ம் ஆண்டு திரு.ரவி ரவீந்திரன் தலைமையிலான நிர்வாக சபையினரால் மன்றத்தின் யாப்பு விதிகளை கருத்தில் கொள்ளாது மன்றத்தின் அடிப்படை அங்கத்தவராக தீசன் திரவியநாதன் இருக்க முடியாது எனவும் அடாவடியாக தீர்மானித்து கனடாவில் மார்க்கம் பொலிஸ் துணையுடன் வீட்டுக்கு வந்து கனடா காரை கலாசார மன்றத்தின் அங்கத்தவர் பதவி நீக்கப்பட்டுள்ளதாகவும், கனடா காரை கலாசார மன்றத்தின் கலைவிழாவில் கலந்து கொள்ள கூடாது எனவும் அறியத்தந்தனர்.

அதன் பின்னர் தொடர்ந்து வந்த நிர்வாக சபையினால் 2013 பெப்ரவரியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் போது பொதுச்சபையினால் தீசன் திரவியநாதன் மீண்டும் அடிப்படை அங்கத்தவராக இருக்க முடியும் என்பதுடன் மன்றத்தின் நிர்வாக சபையில் அங்கத்தவராக இணைத்துக் கொள்ளப்பட்டார்.

அதன் பின்னர் கனடா காரை கலாசார மன்றத்தின் செயலாளர் பதவிக்கு 2014 மே மாதம் 19ம் திகதி திரு.தீசன் திரவியநாதனை செயலாளராக ஆக்க வேண்டிய தேவை மன்றத்தின் நிர்வாக சபையினருக்கு ஏற்பட்டிருந்தது. காரணம் திரு.தம்பிஜயா பரமானந்தராசா தலைமையிலான நிர்வாக சபையில் ஏற்கெனவே செயலாளராகவிருந்த திருமதி கருணாவதி சுரேந்திரன் அவர்களும், அதன் பின்னர் செயலாளராகவிருந்த திரு.மார்க்கண்டு செந்தில்நாதன் அவர்களும் இராஜினாமா செய்ததை முன்னிட்டு அந்நிர்வாக சபையில் மூன்றாவது ஆளாக ஒரு செயலாளர் பதவி ஏற்பதற்கு எவரும் முன்வரவில்லையென்பது குறிப்பிடத்தக்கதாகும்.



நிர்வாக சபை கூட்டம் ஒன்று பூங்காவில் நடைபெற்ற போது..!

2013ம் ஆண்டு “காரை வசந்தம்” நிகழ்வின் போது திரு.தம்பிஜயா பரமானந்தராசா தலைமை - யில் திரு.மார்க்கண்டு செந்தில்நாதன் அவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளராகவும் திரு.திருநாவுக்கரசு பேரின்ப - ராசா செயலாளராகவும் கொண்ட நிர்வாக சபையி- னரால் 27,000 டொலர்கள் வரை இலாபமாக பெறப்பட்டு மன்றத்தின் வங்கி கணக்கில் பெற்றுக்கொண்ட நிலையில் அந்நிதியினை காரை மண்ணின் எந்தெந்த தேவைகளின் செலவுகளிற்காக அனுப்பி வைப்பது தொடர்பான நிர்வாக சபை தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் தான் அன்றைய செயலாளர் திரு.மார்க்கண்டு செந்தில்நாதன் உட்பட மேலும் 3 நிர்வாக அங்கத்தவர்கள் தமது பதவிகளை இரா ஜினாமா செய்வதாக கடிதம் அனுப்பியிருந்தனர்.

இந்த நிலையில் செயலாளர் பதவியை ஏற்றுக்கொண்ட திரு.தீசன் திரவியநாதன் திரு.தம்பிஐயா பரமானந்தராசா தலைமையிலான நிர்வாக சபையில் இணைந்து கொண்டு முறையே நிர்வாக சபையின் தீர்மானங்களின் பிரகாரம் காரைநகர் பாடசாலைகளிற்கு வேண்டுகோள் களி -ன் அடிப்படையில் தேவைகளின் முக்கியத்துவம் கருதி 10 ஆயிரம் முதல் 10 இலட்சம் வரை ஒவ்வொரு பாடசாலைகளிற்கும் வழங்கப்பட்டன.

அத்துடன் 2015 ம் ஆண்டு “காரை வசந்தம்” காரை மண்ணின் தேவைகளில் பிரதானமான ஒன்றினை நிறைவேற்றக்கூடிய வகையில் பாரிய நிதி சேகரிப்புடன் நடாத்தப்பட வேண்டும் எனவும், கனடாவில் வதியும் காரைநகர் மக்களிடத்தே ஊர் மண்ணின் தேவைகள் மற்றும் மக்களின் நிலைப்பாடு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றளவிலும் கனடா காரை கலாசார மன்றத்தின் 25வது ஆண்டில் வரலாற்று பதிவாக இட்டுச் செல்ல வேண்டும் எனவும் நிர்வாக சபையில் கலந்துரையாடப்பட்டது.

அதன் அடிப்படையிலே 13 நிர்வாக சபை அங்கத்தவர்களை கொண்ட நிர்வாக சபையிலே போஷகர் சபையின் முழுமையான சம்மதத்துடன் ஆரம்பிக்கப்பட்டதே காரைநகர் ஆரம்ப பாடசாலைகள் அனைத்திற்கும் தலா 10 இலட்சம் வீதம் வழங்குவது என்ற திட்டம் ஆகும்.

அதன் அடிப்படையில் இத்திட்டத்திற்கு முதற்கட்ட - மாக கனடா காரை கலாசார மன்றத்திடம் உள்ள அனைத்து நிரந்தர வைப்புக்களையும் இணை - த்துக் கொள்வது என்றும் அதற்குரிய அனுமதியி - னையும் இத்திட்டத்திற்கான அனுமதியினையும் பொதுச்சபையினை கூட்டி பெற்றுக்கொள்வது எனவும் போஷகர் சபை மற்றும் நிர்வாக சபை தீர்மானித்தது.



**07.12.2014 அன்று பொதுச்சபையின் அங்கீகாரத்தினை பெறுவதற்காக கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தின் போது நிர்வாக சபையினர் மற்றும் போஷகர் சபையினர் - பெரிய சிவன் ஆலயம்**

07.12.2014 அன்று கனடா காரை கலாசார மன்றத்தின் பொதுக்கூட்டம் கனடா பெரிய சிவன் ஆலயத்தில் திரு.தம்பிஐயா பரமானந்தராசா தலைமையிலான நிர்வாக சபையினரால் கூட்டப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கனடா காரை கலாசார மன்றத்தின் நிரந்தர வைப்பில் கனடாவிலும் இலங்கையிலும் சேர்த்து



மொத்தம் 30 இலட்சம் ரூபாய்கள் வரை இருப்பதாகவும், அவற்றினை காரைநகர் ஆரம்ப பாடசாலைகள் நிரந்தர வைப்பு நிதியத்திற்கு சேர்த்துக் கொள்வதற்காக மன்றத்தின் யாப்பின் பிரகாரம் தற்போதைய நிர்வாக சபையினரின் பணம் அல்லாது முன்னைய நிர்வாக சபையி- னரின் நிதியினை பெற்றுக்கொள்வதற்காக பொதுச்சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்பதற்கு இணங்க மட்டுமே இப்பொதுக்கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொதுக்கூட்டத்தின் போது நூற்றுக்கும் மேற்பட்ட அங்கத்வதர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிரந்தர வைப்பு நிதியினை பாடசாலைகள் நிரந்தர வைப்பிற்காக பெற்றுக்கொள்வதுடன், காரைநகர் பாடசாலைகளின் அடிப்படை அத்தியாவசிய தேவைகளை கருத்தில் கொண்டு, எந்தெந்த தேவைகளிற்காக இந்நிதி பயன்படுத்தப்படும் எனவும் அது தொடர்பாக சார்பான மற்றும் எதிரான கருத்துக்கள் முன்வைக்க போதியளவு நேரம் அனைத்து அங்கத்தவர்களிற்கும் வழங்கப்பட்டது. அதன் பின்னர் இரகசிய வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது.

கலந்து கொண்ட அனைத்து அங்கத்தவர்களும் ஏகமனதாக ஆரம்ப பாடசாலைகளிற்கு நிரந்தர வைப்பில் தலா 10 இலட்சம் வீதம் வைப்பில் இட்டு வழங்குவதனை ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். அதன் காரணமாக வாக்கெடுப்பு நடாத்த வேண்டிய தேவை ஏற்படவில்லை.

**வாக்கெடுப்பின் மூலம் 66 அங்கத்தவர்கள் நிரந்தர வைப்பு நிதியனைத்தினையும் பாடசாலைகள் திட்டத்திற்கு சேர்த்துக் கொள்ள சார்பாகவும், 33 அங்கத்தவர்கள் நிரந்தர வைப்பு நிதியினை இத்திட்டத்திற்கு சேர்த்துக் கொள்ள எதிராகவும் வாக்களித்திருந்தனர்.**

ஆனால் மன்றத்தின் நிரந்தர வைப்பில் இருந்த நி-தியினை இத்திட்டத்திற்கு சேர்த்துக் கொள்வதற்கு முன்னைய நிர்வாகங்களில் பதவிவகித்த ஒரு சில நிர்வாக அங்கத்தவர்கள் எதிராக கருத்துக்களை கொண்டிருந்ததுடன் தமது கருத்துக்களிற்கு சார்பாக மக்கள் பலரை தயார்படுத்தியும் ஜனநாயக முறையான வாக்கெடுப்பு முறையினை கலைக்கவும் தயாராக வந்திருந்தனர். ஆனாலும் காவல் பணியாளர்கள் மூலம் நிலமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு இரகசிய வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது.

வாக்கெடுப்பின் மூலம் 66 அங்கத்தவர்கள் நிரந்தர வைப்பு நிதியனைத்தினையும் பாடசாலைகள் திட்டத்திற்கு சேர்த்துக் கொள்ள சார்பாகவும், 33 அங்கத்தவர்கள் நிரந்தர வைப்பு நிதியினை இத்திட்டத்திற்கு சேர்த்துக் கொள்ள எதிராகவும் வாக்களித்திருந்தனர். எனவே முற்றிலும் ஜனநாயக முறைப்படியும் கனடா காரை கலாசார மன்றத்தின் யாப்பு விதிகளிற்கு அமையவும் மன்றத்தின் நிரந்தர வைப்பு நிதியான 30 இலட்சம் ரூபாய்கள் வரையான நிதி பாடசா-லைகள் திட்டத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டது.

அத்துடன் இந்த நிரந்தரவைப்பு நிதியானது கடந்த பல ஆண்டுகளாக கனடா வாழ் காரை மக்களினால் மண்ணின் பெயரால் மக்களின் பெயரால் சேர்க்கப்பட்டு உரிய முறையில் மண்ணிற்காகவும் அதன் மக்களிடமும் சேர்ப்புவிக்கப்பட வேண்டிய பணமும் ஆகும். அதன் அடிப்படையிலும் தர்மம் வென்றது.

ஆனாலும மேற்படி காரைநகர் ஆரம்ப பாடசாலை-லகளிற்கு நிரந்தர வைப்பு நிதியாக தலா 10 இலட்சம் வழங்கியதையும், மன்றத்தின் நிரந்தர வைப்பில் பயனற்றிருந்த 30 இலட்சம் ரூபாய்களை காரைநகர் பாடசாலைகளின் அடிப்படை அத்தியாவசிய தேவைகளிற்காக பெறப்பட்டு வழங்கியதையும் ஏற்றுக்கொள்ள முடியாதளவில் ஜனநாயகத்தையும், மன்றத்தின் வளர்ச்சி, மண்ணின் வளர்ச்சி என்பவற்றை எள்ளளவும் கருத்தில் கொள்ளாது மன்றத்தின் நிர்வாக பதவிகளில் பலகாலம் இருந்து தமது சுயசே-தவைகளை புரிந்து வந்தவர்களும், மோசடிகளிற்கு வித்திட்டவர்களும், மோசடிகளை புரிந்தவர்களும் மிகப் பாரியளவில் பொறாமை -யுணர்ச்சி கொண்டு பலவித அசௌகரியங்களை

மன்றத்திற்கும்

இவ்வரலாற்று நிகழ்வினை புரிந்த நிர்வாக சபை -யினருக்கு எதிராகவும் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். இதன் காரணமாக கனடா காரை கலாசார மன்றம் பெரும் பின்னடைவை சந்தித்து வருவதுடன் ஜனநாயகத்தையோ அன்றி மன்றத்தின் கொள்கைகளிற்கோ மதிப்பளிக்காது செயற்பட்டுவரும் இது போன்ற ஒரு சில புல்லுருவிகளினால் இனிவரும் காலங்களில் கனடா வாழ் காரைநகர் மக்கள் மன்றத்தை விட்டு வெகு தூரம் செல்ல காரணமாகின்றார்கள். கனடா காரை கலாசார மன்றத்தின் நல்லெண்ணம், நம்பிக்கை என்பவற்றை கருத்தில் கொண்டும் "எனது ஊர் காரைகர்" முறை -யாக ஊடக பணியில் மட்டும் ஈடுபட்டு வருதாலும் காரை மண்ணின், மன்றங்களின், மக்களின் செய்திகளை சொல்லதுடன் மட்டும் நிறுத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கின்றது. அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதும் அதனை கண்டு கொள்ளாது விடுவதும் மக்களின் கடமையாகும்.

இடம் பெயர்ந்த நாடுகளில் ஒரு ஊடகம் அனைத்து சுதந்திர உரிமைகளையும் பயன்படுத்தி உண்மைகளை வெளிக்கொண்டு வருகின்றது. அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் மக்களுக்கே உண்டு.

வெளிநாடுகளிற்கு இடம் பெயர்ந்த காரை மக்களில் பெரும்பாலானோர் தாம் வாழ்ந்த மண்ணிற்கும் மக்களிற்கும் பணிபுரியும் நோக்குடனும் அடுத்துவரும் சந்ததியினருக்கு எமது காரை மண்ணின் பெருமைகளை எடுத்துச் செல்லவும், தர்ம சிந்தனையும் தாராள சிந்தனையும் கொண்டவர்களாலேயே ஊர் அமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. நாளடைவில் மேற்குறிப்பிட்ட எவ்வித நோக்கமும் அற்றவர்கள் தமது சுய தேவைகளிற்காக, தமது தனிப்பட்ட திறன்களை வெளிக்கொண்டு வரவும், அதனை நிரூபிப்பதற்குரிய இடமாகவும் கருதி ஊர் அமைப்புக்களில் நிர்வாக உறுப்பினர் என்ற போர்வைக்குள் இயங்கி வருகின்றனர்.

அதனை சந்தேகத்திற்கு இடமின்றி ஆதாரங்களுடன் "எனது ஊர் காரைநகர்" கண்டுகொள்கின்றது. பாடசாலைகளிற்காகவோ அன்றி உறவுகளிற்காகவோ அன்றி அனாதைகளிற்காகவோ தர்ம சிந்தனை கொண்டு நிதி உதவி வழங்க முடியாதவர்கள் இன்று அமைப்புக்களின் நிர்வாக பெரும் பதவிகளில் அமர்ந்திருக்கின்றார்கள். கடந்த காலங்களில் இவர்கள் அந்த அமைப்பின் ஊடாக வழங்கிய அன்பளிப்புக்கள் அல்லது தான தர்மங்களை அறிந்து கொள்வோமாக இருந்தால் எதற்காக இவ்வாறான அமைப்புக்களில் குந்தி இருக்கின் - றார்கள் என்பதனை சிந்தனை அற்றவரேயானாலு -ம் அறிந்து கொள்ள முடியும்.

அந்த வகையில் கனடா காரை கலாசார மன்றத்தினால் 05.05.2015 அன்று காரைநகரில் உள்ள 11 ஆரம்ப பாடசாலைகளிற்கு தலா 10 இலட்சம் வீதம் மொத்தம் ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய்கள் வழங்கப்பட்டது. அந்த நிதி -யின் 30 இலட்சம் ரூபாய்கள் கனடா காரை கலா -சார மன்றத்தின் 2006ம் ஆண்டுக்கு முற்பட்ட நிர்வாக சபையினரால் நிரந்தர வைப்பில் இடப்பட்டு அதிலிருந்து இருந்து நிதியாகும். அத்துடன் 80 இலட்சம் ரூபாய்கள் வரையான நி- தியினை கனடாவில் வாழும் காரைநகர் மக்களில் வெறும் 85 காரை மக்களும், 10 அனுசரணையா - ளர்களுமாக மொத்தம் 95 பேர்கள் மட்டுமே மேற்படி பாடசாலைகளிற்கு வழங்கப்பட்ட நிதியி - னை வழங்கியிருந்தார்கள். (நிதி வழங்கியவர்கள் விபரம் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது).

இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கியிராத மற்றும் வழங்க முடியாத மனநிலையிலும் ஊர்ப்பணி என்ற போர்வையில் கனடா காரை கலாசார மன்றத்தில் காலங்காலமாக பதவிகளில் குந்தியிருந்தவர்களும், மன்றத்தின் அனுசரணை யாளர்கள் மற்றும் அங்கத்வர்கள் பணத்தின் ஊடாக கொண்டாட்டங்களை நடாத்தி குஷிப்பட்டுக் கொண்டவர்களும் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு பயன்பெற்றுக்கொண்டிருக்கும் இக்காலத்திலும் பொறுக்க முடியாதளவில் பொங்கிக்கொண்டிருக் - கின்றார்கள். அதன் விளைவுகளை வெகுவிை- ரவில் www.karainews.com வெளிக்கொண்டுவரும்.


12 வது பாடசாலையான வியாவில் சைவ வித்தியாலயத்திற்கு கனடாவில் வதியும் இப்பாடசாலையின் பழைய மாணவனும் கனடாவில் அதிஷ்டலாப ரிக்கெட் மூலமாக 18 மில்லியன் டொலர்களிற்கு அதிபதியானவருமான திரு.ப.லக்கிராஜா அவர்கள் தனது சார்பாக அதனை வழங்குவதாகவும், தனது பாடசாலைக்கு தான் வழங்கும் கௌரவமாகவும், தனது பெற்றோர்களிற்கு தான் கொடுக்கும் மரியாதை - யாகவும் தனது ஊரிற்காக தான் செய்யும் பெரும் கொடையாகவும் அதனை செய்வதாகவும்



தோப்புக்காடு திருஞானசம்பந்தர் வித்தியாலயத்திற்கு சென்ற போது சொந்தமாக உடனடி உதவி வழங்கிய போது...

அவரிடம் இதற்கான நிதி உதவி வேண்டி சென்றிருந்தவேளையில் தெரிவித்திருந்தார். அதனை மிக விரைவில் வழங்குவதாகவும் தெரிவித்தார். அதன் அடிப்படையில் திரு.ப.லக்கிரா ஜாவிடம் அந்த பாடசாலைக்குரிய 10 இலட்சத் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.தம்பிஜயா பரமானந்தராசா

கனடா காரை கலாசார மன்றத்தின் நிரந்தர வைப்பில் இருந்து பெறப்பட்ட 30 இலட்சம் வரையான நிதி இத்திட்டத்திற்கு பெறப்பட்ட பின்னர் எஞ்சிய 80 இலட்சம் ரூபாய்களின் 50 வீதமான நிதியான 40 இலட்சம் ரூபாய்கள் திரு.தம்பிஜயா பரமானந்தராசா தலை-மையிலான நிர்வாக சபையில் பதவி வகித்த நிர்வாக சபை அங்கத்தவர்களே வழங்கியிருந்தார்கள்.


அதில் தலைவர் திரு.தம்பிஜயா பரமானந்தராசா 8,000 டொலர்கள்(9 இலட்சம் ரூபாய்கள்), செயல-ாளர் தீசன் திரவியநாதன் 20,000 டொலர்கள் (22 இலட்சம் ரூபாய்கள்) உட்பட மற்றும் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களும் இத்திட்டத்திற்குரிய நிதியினை வழங்கியிருந்தனர்.



திரு.தீசன் திரவியநாதன்

பொதுச்சபை கூட்டத்தின் மூலம் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவான காரைநகர் ஆரம்ப பாடசாலைகளிற்கு நிரந்தர வைப்பில் இட்டு வழங்கும் திட்டத்தினை சபை யின் முன்னே மரி -யாதை நிமிர்த்தம் கருதி ஒத்துக்கொண் -ட வர்கள் திரை மறைவில் இத்திட்டத்திற்கு எதிராக நிதி வழங்க ஒப்புக்கொண்டவர்கள் மற்றும் தமது உறவினர்களை இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க கூடாது எனவும் கேட்டுக் கொண்டனர். அத்துடன் கடந்த நிர்வாக சபைகள் பலவற்றில் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பெரும் பதவிகள் உட்பட, போஷகர்களாக பணியாற்றியவர்கள் என பலரும் இத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்கவில்லை என்பதுடன் பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட்ட இத்திட்டத்தினை நேரடியாகவும் மறைமுகமாகவும் எதிர்த்து வந்தார்கள்.

அதன் மூலம் இத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்க ஒப்புக்கொண்டவர்களிடமிருந்து பெறப்படவேண்டிய 27,000 டொலர்கள் வரையான நிதியினை வழங்க ஒப்புக்கொண்டவர்களிற்கு கொடுக்கப்பட்ட தவறான பிரச்சாரங்கள் ஊடாகவும் இந்நிதி பாடசாலை-லகளிற்கு செல்ல போவதில்லையென திட்டமிட்டு பரப்பிய வதந்திகள் ஊடாகவும் தமது மனச்சாட்சிக்கும் துரோகம் இழைத்தவர்களாக தாம் கற்ற பாடசாலைகளிற்கு குறைந்தளவு தமது வாழ் நாளில் 250 டொலர்களாவது கொடுக்க முடியாதளவில் ஆக்கிக்கொண்டார்கள்.



திரு.திருநாவுக்கரசு பேரின்பராசா

இவ்வாறான பலவித தடைகளையும் கடந்து எடுத்துக்கொண்ட இலட்சியமும் கொடுத்த மக்களின் பணமும் காப்பாற்றப்பட வேண்டும் எனும் நோக்கில் 05.05.2015 அன்று காரைநகர் ஆரம்ப பாடசாலைகள் அதிபர்கள், காரைநகர் அபிவிருத்தி சபையினர் அத்துடன் காரைநகர் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர், அனை-வரையும் ஒரு சேர அழைத்து அன்றைய காரைநகர் கோட்ட கல்வி அதிகாரியாக கடமையாற்றிய திரு.பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் முன்னிலையில் அனைத்து பாடசாலைகள் அதிபர்களிடமும் அவர்களது பாடசாலை களிற்காகன 10 இலட்சம் ரூபா நிரந்தர வைப்பு பணம் வைப்பில் இட்டதற்கான ஆவணங்கள் கையளிக்கப்பட்டன.

அத்துடன் இந்த நிரந்தர வைப்பு பணத்தில் இருந்து கிடைக்கப்பெறும் வட்டி பணத்தின் ஊடாக பாடசாலை அதிபர்கள் நிறைவேற்ற வேண்டிய அடிப்படை அத்தியாவசிய தேவைகள் பட்டியலிடப்பட்டு, அந்த முறைமைகளிற்கு அமை யவே இதனூடு கிடைக்கப்பெறும் வட்டிப்பணம் பாடசாலைகளிற்கு செலவு செய்யப்படும் எனவும் ஆறு மாதங்களிற்கு ஒரு தடவை நேரடியாக பாடசாலையின் வங்கி கணக்கிற்கு வங்கியினால் வட்டிப்பணம் வைப்பில் இடப்படும் எனவும் எழுதப்பட்டு சட்டவல்லுனர் ஒருவரினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்தப்பட்ட ஆவணம் ஒன்றில் கையொப் -பம் இட்டு பெற்றுக்கொண்டனர்.

வருடாந்தம் பெறப்படும் வட்டி பணத்தின் ஊடாக குறிக்கப்பட்ட அடிப்படை அத்தியாவசிய தேவை-களை நிவர்த்தி செய்ய தவறும் அதிபர்கள் மீது கிடைக்கப்பெறும் குற்றச்சாட்டினை ஆராய்ந்து முதற்கண் காரைநகர் அபிவிருத்தி சபை-பயானது இவ்வைப்பினை இட்ட கனடா காரை



கோவிந்தர் பாடசாலையினை நேரில் சென்று பார்வையிட்ட போது அதிபர் திரு.வே.முருகமூர்த்தி அவர்களுடன்

கலாசார மன்றத்திற்கு அறியத்தரவேண்டும். அதனை மீள்பரிசீலனை செய்து கனடா காரை கலாசார மன்றம் சந்தேகத்திற்கு இடமின்றி வைப்பில் இடப்பட்ட பணத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற பணத்தினை உரிய முறையில் பயன்படுத்த வழிவகைகள் செய்வதுடன் மேற்கொண்டும் நடைமுறைப்படுத்த முடியாதவிடத்து அந்த பாடசாலைக்குரிய நிரந்தர வைப்பு பணத்தினை மட்டும் காரைநகர் அபிவிருத்தி சபை கணக்கிற்கு மாற்றுமாறு தேசிய சேமிப்பு வங்கிக்கு கடிதம் அனுப்ப வேண்டும்.

தேசிய சேமிப்பு வங்கி காரைநகர் கிளையில் நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ள மேற்படி ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய்கள் நிரந்தர வைப்பில் இருந்து மீள பெறவேண்டிய தேவை ஏற்பட்டால் அதனை தேசிய சேமிப்பு வங்கி பிரதான கொழும்பு கிளையினருடன் தொடர்புகளை மேற்கொண்டு மட்டுமே பெறமுடியும். அவ்வாறு காரைநகர் கிளை முகாமையாளரினால் மேற்படி நிரந்தர வைப்புக்கள் தொடர்பாக மேலதிகமான ஆவணங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தனிப்பட்ட ஒருவரோ அன்றி ஒரு குழுவோ மேற்படி நிரந்தர வைப்புக்களை மீள பெறமுடியாது. அதனை மீள பெறுவதாயின் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளை தேசிய சேமிப்பு வங்கியின் பிரதான கிளை கொண்டிருக்கும்.

ஆகவே முற்றிலும் பாதுகாப்பாகவும் காரைநகர் பாடசாலை அதிபர்கள், காரைநகர் அபிவிருத்தி சபை, கனடா காரை கலாசார மன்றம் ஆகியவற்றின் முழுமையான ஒத்துழைப்புடன் மட்டுமே மேற்படி நிரந்தர வைப்புக்களை மீளபெற முடியும்.

இந்நிரந்தர வைப்புக்கள் இடப்படுவதற்கு 5 மாதங்களிற்கு முன்னர் டிசம்பர் மாதம் 31.12.2015 அன்று காரைநகர் கோட்ட கல்வி அதிகாரி திரு.பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் தலைமையில் அனைத்து பாடசாலை அதிபர்கள் மற்றும் காரைநகர் அபிவிருத்தி சபை நிர்வாகத்தினர் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் ஆகியோர் கலந்து கொள்ள கோட்ட கல்வி அதிகாரி பணிமனையில் இது தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது.

பாடசாலைகளின் அடிப்படை அத்தியாவசிய தேவைகள் எவை என்பது பற்றியும், கல்வி திணைக்களத்தினால் நிறைவேற்றப்படாது அல்லது நிறைவேற்றப்பட முடியாத செயற்பாடுகள் எவை என்பது பற்றியும் பாடசாலைகளின் தேவைகள் பற்றியும் அறிந்து கொள்ளப்பட்டு அன்றைய கூட்டத்தின் மூலம் காரைநகர் பாடசாலைகள் அதிபர்களினால் அமைக்கப்பட்ட வரைமுறைகளே இந்நிரந்தர வைப்பின் மூலம் கிடைக்கப்பெறும் வட்டிப்பணத்தினை செலவு




தோப்புக்காடு திருஞானசம்பந்தர் வித்தியாலய மாணவனுக்கு உடனடி உதவி வழங்கப்பட்டது...

செய்யும் தீர்மானங்கள் ஆகும்.
05.05.2015 அன்று வைப்பில் இடப்பட்ட மேற்படி நிரந்தர வைப்புகளிற்கான முதற்கட்ட ஆறுமாதங்களிற்கான வட்டி பணம் 05.11.2015 அன்று அனைத்து பாடசாலைகளின் வங்கி கணக்கில் வைப்பில் இடப்பட்டதாக வங்கியில் இருந்து அறியப்படுகின்றது. இருந்தபோதிலும்


நிர்வாக சபையினரால் அது தொடர்பாக எவ்வித தகவல்களோ அன்றி பாடசாலைகளுடன் எவ்வித தொடர்புகளை கொண்டு தற்போதைய மன்ற நிர்வாகம் இயங்கி வருகின்றது என்பது பற்றியோ மன்றத்தின் அங்கத்தவர்களுக்கு தற்போதைய நிர்வாகம் அறியத்தருவதில்லை.

தற்போதய நிர்வாக சபையினர் மன்றத்தின் அங்கத்தவர்களுடன் மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பான தொடர்பாடல்களை விடுத்து தனிப்பட்ட ஒருசிலரிடம் பகைமை பாராட்டி சொந்த விருப்பு வெறுப்புகளிற்கு ஏற்ப மன்றத்தின் செயற்பாடுகளை நிர்வகித்து, ஆதாரமற்ற செய்திகளை மன்றத்தின் இணையத்தளத்தில் எடுத்து வந்து தன்னிச்சை தனமாகவும், தான்தோன்றித்தனமாகவும் நிர்வாகத்தினை நடாத்தி வருகின்ற செயலானது தற்போதைய நிர்வாக சபையின் மத்தியிலும் பெரும் பிளவினையும் கனடா வாழ் காரைநகர் மக்களிடத்திலே பெரும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. எனினும் மன்றத்தின் செய்திகள் மற்றும் நடைபெறும் மோசடிகள் தொடர்பான உண்மைகள் 'எனது ஊர் காரைநகர்" இணையத்தளம் ஊடாக வெளிக்கொண்டு வரப்படும் என்ற நம்பிக்கையில் மக்கள் ஆர்வத்துடன் பொறுமையாக காத்திருக்கின்றனர்.









**31.12.2014 அன்று காரைநகர் கோட்ட கல்வி அதிகாரி பணிமனையில் இடம் பெற்ற அதிபர்கள், காரைநகர் அபிவிருத்தி சபை நிர்வாகத்தினர் மற்றும் வங்கி முகாமை -யாளர் ஆகியோர் கலந்து கொண்டு நிரந்தர வைப்பு தொடர்பாக எடுக்கப்பட் தீர்மானத்தின் போது...**

கனடா-காரை கலாசார மன்றத்தினால் காரைநகரில் இயங்கி வரும் 12 ஆரம்ப பாடசாலைகளில் இதுவரை 11 ஆரம்ப பாடசாலைகளிற்கு தலா 10 இலட்சம் வீதம் நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ளது. இந்நிரந்தர வைப்பில் இருந்து கிடைக்கப்பெறும் வட்டியில் இருந்து ஆரம்ப பாடசாலைகள் அந்நிதியினை செலவு செய்யும் தீர்மானங்கள் நேரடியாக கோட்ட கல்வி அதிகாரி, அதிபர்கள், வங்கி முகாமையாளர் மற்றும் கனடா காரை கலாசார மன்றத்தின் தலைவர் திரு.தம்பிஜயா பரமானந்தராச, செயலாளர் திரு.தீசன் திரவியநாதன் ஆகியோர் கலந்து கொண்டு 31.12.2014 அன்று எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

1. கனடா காரை கலாசார மன்றத்தினால் வைப்பில் இடப்படும் பணம் காரைநகர் அபிவிருத்தி சபையின் பெயரில் காரைநகர் தேசிய சேமிப்பு வங்கி கிளையில் 6 மாதத்திற்குரிய நிலையான வைப்பில் இடப்படுவதாகவும், ஆறு மாதத்திற்கு ஒரு தடவை கிடைக்கப்பெறும் வங்கி வட்டி பாடசாலைகளின் நடைமுறை கணக்கிற்கு வங்கியினால் வரவு வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நிலையான வைப்பில் உள்ள முலீட்டு பணமான ரூ10 இலட்சத்தினை எக்காரணம் கொண்டும் எடுக்க முடியாது. எனினும் முக்கியமான சரியான காரணங்களுக்காக தேவையேற்படும் பட்சத்தில் காரைநகர் அபிவிருத்தி சபையானது கனடா-காரை கலா -சார மன்றத்தின் நிர்வாக சபையின் அனுமதியை முதலில் பெற்று, பாடசாலை - களின் அதிபர்களின் முழுமையான சம்மதத்துடன் பெற்றுக்கொள்ள முடியும்.

3. நடைமுறை கணக்கிற்கு வரும் வங்கி வட்டி பணமானது பின்வரும் நியதிகளுக்கு அமைய அதிபர்கள் செலவு செய்ய வேண்டும். இப்பணம் தொடர்பாக கனடா-காரை கலாசார மன்றத்திற்கு அறிவிக்கும் பொறுப்பு அதிபர் பிரத்தியேகமான ஒரு கட்டுப்பாட்டு பேரேட்டினை பேணி தவணைக்கு ஒரு தடைவ அதிபர் இந்நிதி தொடர்பான வரவு செலவு அறிக்கையை கோட்ட கல்வி பணிப்பாளருக்கும், கனடா காரை கலாசார மன்றத்திற்கும், காரைநகர் அபிவிருத்தி சபைக்கும் அனுப்புதல் வேண்டும்.

நிதியினை செலவளிக்கும் நியதிகள்:

-நேரடியாக கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிற்கு 50% (மேலதிக வகுப்புகளிற்கான ஆசிரியர் வேதனம், மெல்ல கற்கும் மாணவர்களிற்கான விசேட வகுப்புகளிற்கான ஆசிரியர் வேதனம் மற்றும் அதற்குரிய செலவீனங்கள்)

- இணைப்பாடவிதான செயற்பாடுகள;(Co Curricular Activities) 20% ( விளையாட்டு, தமிழ் திறன் போட்டி, பரிசளிப்பு நிகழ்வுகள்)
- மேலதிக மின்கட்டணம் மற்றும் சிறு திருத்த வேலைகள் 20%
- சுகாதாரம், உணவு, குடிநீர் கட்டணம் 10%

4. வருடத்திற்கு ஒரு தடைவ பாடசாலை அதிபர்களின் கூட்டத்தில் இந்நியதிகள் கனடா காரை கலாசார மன்றத்தின் அனுமதியுடன் அதிபர்களினால் பாடசாலை - களின் தேவைகளிற்கு அமைவாக மாற்றிக்கொள்ள முடியும் எனவும் தீர்மானிக்கப்படுகின்றது.

இப்பாடசாலைகளின் நிரந்தர வைப்பு நிதியத்திற்கு நிதி வழங்கியவர்களின் பெயர் மற்றும் தொகை வருமாறு:

| | | Canada $ |
|---|---|---|
| Theesan | Thiraviyanathan | 20,000.00 |
| Paramanantharajah | Thambyayah | 8,000.00 |
| Dr Kalaichandran | | 5,000.00 |
| Gopal | Mailwaganam | 1,200.00 |
| Vigneswaran | Tharmalingam (U.S.A) | 1,200.00 |
| Yogeswary | Suntharesu | 1,200.00 |
| Maheshan | Velauthapillai | 1,000.00 |
| Prabaharan | Piremalakumary (Australia) | 1,000.00 |
| Ravichandran | Thambirajah | 1,000.00 |
| Krisnagopal | Tharmalingam | 1,000.00 |
| Dayligh maintennance service inc | | 500.00 |
| Dr Jayabalan | Namasivagam | 500.00 |
| Gunaratnam | Somasundaram | 500.00 |
| Logeswaran | Vijayaratnam | 500.00 |
| Maheswaran | Balasuperamaniam | 500.00 |
| Sachichinathan | Sittampalam | 500.00 |
| Sivaguru | Kandiah | 500.00 |
| Thavakumar | Ponnambalam | 500.00 |
| Thevakumar | Sellathurai | 500.00 |
| Thurairathinam | Somasundaram | 500.00 |
| Unicar heating & air Conditioning Ltd | | 500.00 |
| Pirakalatheeswaran | Nadarajah | 500.00 |
| Well Wisher | K.S | 500.00 |
| Lingarajan | Nagalingam | 450.00 |
| Prakash | Balasundram | 400.00 |
| Jeyakumar | Sivakumaran | 300.00 |
| Ariyaratnam | Manokaran | 250.00 |
| Babyrani | Thambyayah | 250.00 |
| Balasubramaniam | Kanagasabai | 250.00 |
| Devarajan | Chelliah | 250.00 |
| Jeevanantharajah | Thambiyah | 250.00 |
| Jeyachandran | Thambirajah | 250.00 |
| Jeyakumar | Nadarajah | 250.00 |
| Kajamugan | Nagaratnam | 250.00 |
| Kanagasabathy | Mannikkam | 250.00 |
| Kanagasundaram | Sivakumaran | 250.00 |
| Kandasamy | Shanmugam | 250.00 |
| Krishnaratnam | Somasundaram | 250.00 |
| Kuganeshapavan | Sivasubramaniam | 250.00 |
| Maharajah | Sangarapillai | 250.00 |
| Mahendram | Visvalingam | 250.00 |
| Mannivannan | Senthilnathan | 250.00 |
| Manokarathas | Kandiah | 250.00 |
| Paramswaran | Vijayaratnam | 250.00 |
| Kandeepan | Parameswaran | 250.00 |
| Paranthaman | Visvalingam | 250.00 |
| Sajee | Navaratnam | 250.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலைகள் நிரந்தர வைப்பு நிதியத்திற்கு நிதி வழங்கியவர்களின் விபரம் தொடர்கிறது..**

| | | |
|---|---|---|
| Satkunarajah | Thuirunavukkarasu | 250.00 |
| Sivaramalingham | Sivasubramaniam | 250.00 |
| Sivarasan | Sathasivam | 250.00 |
| Sothynanthan | Arumugam | 250.00 |
| Sri ranganathan | Arumugam | 250.00 |
| Suthaharan | Gunasegaram | 250.00 |
| Thayaparan | Manikkavasagar | 250.00 |
| Thirunavukkarasu | Perinparajah | 250.00 |
| Umaiyabahan | Kanagendram | 250.00 |
| Vignarajah | Balasubramaniam | 250.00 |
| Vinayagarajah | Balasubramaniam | 250.00 |
| Pathmanathan | Maheswaran | 250.00 |
| Sivananthan | Mahanathan | 250.00 |
| Sivamalar | Mahadevan | 250.00 |
| Maheswaran | Vijayaratnam | 250.00 |
| Sivathevi | Sivasothy | 250.00 |
| Gugadas | Kandasamy | 250.00 |
| Rajagopal | Shanmugam | 250.00 |
| Vijayakumar | Nadarajah | 250.00 |
| Indrathevi | Jeganathan | 250.00 |
| Vicknarajah | Kandiah | 250.00 |
| Mayuran | Velauthapillai | 250.00 |
| Arikaran SPS | S | 250.00 |
| Kirupakaran | Nagarajah | 200.00 |
| Krishnamoorthy | Nelakandan | 200.00 |
| Kunchithapatham | Nagalingam | 200.00 |
| Kumareshan | Kanagasabai | 200.00 |
| Chandrasooriyakumar | M.A.Kandiah | 200.00 |
| Sivanayakam | Sivasankar | 200.00 |
| Balakumar | Vellauthampillai | 150.00 |
| Kalatharan | Manikkavasagar | 150.00 |
| Thanapalashingham | Ramanathan | 150.00 |
| Sivapakkium | Maheswaran | 150.00 |
| Ganeshamoorthy | Subramaniam | 150.00 |
| Chelvanayakam | Subramaniam | 100.00 |
| Gunaratnam | Somasundram | 120.00 |
| Ketheeswaran | Paramu | 100.00 |
| Kodeswaran | Arumugam | 100.00 |
| Manohararajah | Subramaniam | 100.00 |
| Well Wisher | AS | 100.00 |
| Senthilnathan | Markkandu | 100.00 |
| Sachichinathan | Sundareswary | 100.00 |
| Shanmugaratnam | Thillaiyampalam | 100.00 |
| Shanmugam | Vellupillai | 100.00 |
| Sivapalan | Sivasothy | 100.00 |
| Thayanantharajah | Ramanathan | 100.00 |
| Thirukumar | Kasipillai | 100.00 |
| Piraisudi Thurairajah | | 100.00 |
| Raveendran Arasaratnam | | 100.00 |
| Rajendram Velupillai | | 100.00 |

**இவர்களுடன் இலங்கை ரூபாய்கள்**

| | |
|---|---|
| **திருமதி மனோன்மணி தம்பிராசா(மாஸ்ரர்)** | **1,00,000.Rs** |
| **திரு. S.அப்பாப்பிள்ளை(மாஸ்ரர்)** | **25,000 Rs** |
| **ஓர் அன்பர்** | **51,000 Rs** |

இங்கே எடுத்து வரப்பட்ட கனடா காரை மக்கள் மட்டுமே பாடசாலைகள் நிதியத்திற்கு நிதியுதவி அளித்தவர்கள் ஆவார்கள். இவர்களுடன் 'காரை வசந்தம் 2014' மூலம் விளம்பர அனுசரணை மூலம் பெறப்பட்ட நிதி 21,000 டொலர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டது.

தயவு செய்து கனடா காரை கலாசார மன்றத்தின் கடந்த கால மற்றும் தற்போதைய நிர்வாக சபை உறுப்பினர்கள் எத்தனை பேர்கள் இந்த நிதியத்திற்கு நிதியுதவி அளித்துள்ளார்கள் என்பதனை அவதானமாக பார்வையிடவும்.

-எனது ஊர் காரைநகர்

## ' காரைநகர் இந்துக் கல்லூரி ' என மீண்டும் பெயர் பெற்றது கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்


கலாநிதி ஆ.தியாகராசா அவர்கள் காரைநகர் மக்களிற்கும், இப்பாடசாலைக்கும் ஆற்றிய மாபெரும் தன்னிகரில்லா சேவையினை கருத்தில் கொண்டு காரை மக்களினாலும் அவரது விசுவாசத்திற்குரியவர்களானாலும் கடந்த 32 ஆண்டுகளுக்கு முன்னர் 'காரைநகர் இந்துக் கல்லூரி " என பெயர் பெற்றிருந்த இக்கல்லூரியின் பெயரினை கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் என மாற்றிக் கொண்டனர்.


01.01.2016 அன்று கல்வித் திணைக் கழத்தின் ஊடாக மீண்டும் இப்பாடசாலை காரைநகர் இந்துக் கல்லூரி என பெயர் மாற்றம் செய்யப்பட்டு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 04.01.2016 அன்று சம்பிரதாயபூர்வமாக பெயர் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீலிப்பந்தனை ஸ்ரீ துர்க்கா தேவி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் 27.08.2015 அன்று நடைபெற்றது



















**"எனது ஊர் காரைநகர்"**

www.karainews.com

தொகுப்பாளர் தீசன் திரவியநாதன்
331 Trudelle Stree, Unit 34
Toronto, Ont. M1J 3J9 Canada
Email: theesan@karainews.com
TEL: 416 821 8390

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஊக்கம் தந்து எமது ஊர் மக்களின் மேம்பாட்டிற்கான
பணியில் உதவிக்கரம் நீட்டிய சகல ஸ்தாபனங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன்,
உங்கள் ஸ்தாபனங்கள் தொடர்ந்து மென்மேலும் வளர்ச்சிபெற எமது வாழ்த்துக்கள்

# VS.CO

## Cash & Carry

Epicerie fine exotique



அனைத்து விதமான இலங்கை, இந்திய உடன் மரக்கறி வகைகளும், படி வகைகளும் அனைத்து
விதமான மளிகைப் பொருட்களும் மற்றும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மிகக் குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்.

**197, rue du Fbg. St. Denis - 210 rue du Fbg. St. Denis**
**75010 Paris**

**Tél.: 01 40 34 71 65**

**vsco@mti.fr**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org